முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 09.02.2026.

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.</u>**

**<u>அசல் வழக்கு எண். 95/2025</u>**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆறுமுகம் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | கன்னி | வயது | : | 75 |
| ஊர் | : | அளத்துறை | தொழில் | : | விவசாயம் |

**<u>வா.சா. 1 (ஆறுமுகம்): குறுக்கு விசாரணை:</u>**

1. வழக்கு தாவா சொத்து கிராம நத்தம் என்றால் சரிதான். மேற்படி கிராம நத்த பட்டாவின் பெயர் சீனுவாசன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்தானது கன்னி கவுண்டர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. கன்னி கவுண்டர் எப்போது இறந்தார் என்றால் சுமார் 70 வருடம் இருக்கும். எனக்கு அப்போது 5 வயதிருக்கும். மேற்படி கன்னி கவுண்டர் பெயரில் வரி ரசீது ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 1995ம் ஆண்டு சீனுவாசன் பெயரில் நத்தம் பட்டா வழங்கப்பபடடது என்பது தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சீனுவாசன் இறந்தவுடன் அவரின் மகன் கதிர்வேல் மகன் வெளியூா் சென்றுவிட்டாரா என்றால் இல்லை. நானும் சீனுவாசனும் கூட்டாக அனுபவித்ததற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நானும் சீனுவாசனும் அடமானம் அல்லது ஒத்தி வைத்தோமா என்றால் இல்லை. எங்கள் தகப்பனார் இறந்தபிறகு நானும் சீனுவாசனும் வ ீட்டு வரி ரசீது ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

2. சா்வே எண் 65/1ல் 16 சென்ட்டுகள் உடைய சொத்தினை சீனுவாசன் கிரயம் பெற்றாா் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். ஆனால் அந்த பத்திரமானது திருட்டு பத்திரமாகும். மேற்படி பத்திரம் திருட்டு பத்திரம் என்று தெரிந்த உடன் காவல் நிலையத்தில் புகாா் அளித்தேனா என்றால் இல்லை. நான் விவசாயம் செய்வது சொந்த பயிரா அல்லது வாடகை பயிரா என்றால் சொந்த பயிராகும். கன்னி கவுண்டர் இறந்த உடன் என்னுடைய தாயாா் தனபாக்கியம் பெயரில் பட்டா, வரி ரசீது மாற்றம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. ஊரில் பஞ்சாயத்து நடந்தது எந்னத வருடம் எந்த நாளில் நடைபெற்றது என்றால் போன வருடம் ஆடி மாதத்தில் நடைபெற்றது. பஞ்சாயத்து நடந்த பிறகு வழக்கு தாக்கல் செய்யப்படடதா என்றால் சரிதான். பஞ்சாயத்தில் ஏதேனும் ராஜினாமா எழுதப்பட்டதா என்றால் இல்லை. நான் எனது வாக்குமூலத்தில் கதிர்வேல் இறந்தபிறகுதான் பஞ்சாயத்து நடைபெற்றது என்று கூறியுள்ளேன்

என்றால் சரிதான். வழக்கு சொத்தினை நானும், கதிர்வேலும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். கதிர்வேல் இறந்து சுமார் 20, 25 ஆண்டுகள் ஆகியிருக்கும் என்றால் சரிதான்.

3. கதிர்வேல் இறந்தபிறகாவது என் பெயரில் வீட்டு வரி ரசீது ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் வெளியூரில் வசிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொந்த ஊரில்தான் வசிக்கிறேன். நான் தற்போது இந்த வழக்கு சொத்தில் இல்லாமல் எனது மாமனார் வீட்டில் இருக்கிறேன் என்றால் சரிதான். நான் சொந்த பயிர் வைத்துள்ளேன் என்றும் அது எவ்வளவு விஸ்தீரணம் இருக்கும் என்றால் சுமார் 4 ஏக்கர் இருக்கும். வழக்கு சொத்தில் குறிப்பிட்டுள்ள ஜக்பந்திகள் எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளது என்றால் கிராம் நிர்வாக அலுவலர் வந்து கூறினார். நான் வழக்கறிஞர் அறிவிப்பு (வாசாஆ.2) அனுப்புவதற்கு முன்பே மேற்படி கிராம நிர்வாக அலுவலர் வந்து கூறினார் என்றால் சரிதான். மேற்படி ஜக்பந்தியின் விவரத்தை ஏன் வழக்கறிஞர் அறிவிப்பில் தெரிவிக்கவில்லையென்றால் நான் சொல்லிதான் அனுப்பினேன். நான் வாசாஆ.2 ஆனது ஆடி மாதத்தில்தான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். வாசா ஆ.2 அனுப்பியதற்கு பிறகாவது வீட்டு வரி ரசீது உள்ளதா என்றால் இல்லை. என் அண்ணியாகிய பிரதிவாதி வழக்கு சொத்தில் வீடு கட்டும்போது நான் ஆட்சேபணை ஏதேனும் செய்தேனா என்றால் ஆட்சேபணை செய்தேன். எந்த வருடத்தில் வீடு கட்டப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

4. வீடு கட்டியபிறகும் செட்டில்மெண்ட் எழுதி வைக்கும்வரை எழுத்துப்பூர்வமாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டதா என்றால் என்னுடைய மனை தவிர்த்துதான் எழுதிவைத்தார்கள். அதனால் ஆட்சேபணை செய்யவில்லை. சீனுவாசன் அனுபவித்து வந்த சொத்தானது சுமார் 2000 சதுர அடி இருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை. வழக்கு சொத்தினை தற்போது முதல் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். ஆனால் அவர் என்னுடைய நிலத்தையும் சேர்த்து வீடு கட்டியதால்தான் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கு சொத்தில் பொது வழி உள்ளதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் சீனுவாசன் பெயரில் உள்ள 16 செண்ட் நிலத்தை நான் தான் பயிர் வைத்து வருகிறேன் என்றால் சரிதான். சீனுவாசன் இறந்தபிறகு நான் எத்தனை வருடங்கள் பயிர்வைத்திருப்பேன் என்றால் சுமார் 2 வருடமாக பயிர் வைத்திருப்பேன். வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்புவதற்கு முன்பா அல்லது பின்பு பயிர் வைத்தேனா என்றால் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்புவதற்கு முன்பு ஒரு போகமும் அனுப்பியதற்கு பின்பும் வைத்தேன். நான்தான் வழக்கு விவரங்களை என்னுடைய வழக்கறிஞருக்கு தெரிவித்தேனா என்றால் சரிதான்.

5. என்னுடைய வழக்கு தாவாவில் 7ம் பத்தியில் சீனுவாசன் உயிருடன் இருந்த காலம் வரை உரிமை கோரவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2024ல் நோட்டீஸ் அனுப்பியபோது 1ம் பிரதிவாதி என் அண்ணி சண்டை ஏதும் செய்தாரா என்றால் இல்லை. 1995ம் ஆண்டு நத்தம் பட்டா சீனுவாசன் பெயரில் வழங்கிய போது ஏன் எனது பெயரிலும் சேர்த்து கூட்டாக வழங்கவேண்டும் என்று மனு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் அப்போது எனக்கு தோன்றவில்லை. நான் தனியாகவும் அவர் தனியாகவும் அனுபவித்து வந்தோம். சீனுவாசனும் நானும் பாகம் பிரித்துக்கொண்டதற்கான பதிவு செய்யப்பட்ட ஆவணம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். சீனுவாசன் வீட்டில்

ஆண்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வது பொய் என்றும் வழக்கு சொத்தினை நான் அபகரிப்பதற்காகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பயிர் செய்து வரும் நிலத்திலிருந்து 1ம் பிரதிவாதிக்கு ஏதாவது மகசூலில் பாகம் பிரித்துக்கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. கன்னி கவுண்டர் என்பவருக்கு வழக்கு சொத்தை தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை தாவா சொத்து மட்டும்தான்.

6. கன்னி கவுண்டருக்கு வழக்கு சொத்தினை பொறுத்து கிரயம் தானம் அல்லது பரிவர்த்தனை மூலம் கிடைக்கப்பெற்றதா என்றால் இல்லை. நான் பயிர் செய்துகொண்டிருக்கும் சொத்தானது என்னுடைய தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். சீனுவாசன் சொத்தானது கூட்டு குடும்ப சொத்தா அல்லது தனிப்பட்ட சொத்தா என்றால் கூட்டு குடும்ப சொத்தாகும். இந்த வழக்கில் எனக்கு உரிமை இல்லை என்றும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(**குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது**)

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.02.09 18:34:51 +05'30'

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு